# பொதுமை

புறப்படென ஒரு சொல்லுக் கேட்டால் போதும்
பொங்கியெழும் வேங்கையென பாய்ந்து செல்லும்
மறப்படையின் அங்கம் நாம் அகிலம் எங்கும்
மார்தட்டி மறங்காட்டி விரைவோமென்று
விறல்கூறும் பரம்பரையின் அணியில் நிற்கும்
வீரர் நாம் எரிமலையின் தோழரும் நாம்
புறப்பட்டோம் புறப்பட்டோம் போருக்கென்று
புரட்சியுரு தருங் கவிதை இசைக்கவாரீர்.

கவிஞர் - சுபத்திரன்

மலர்: 3 இதழ்: 7 மார்ச்: 1987


## ஈழப் போராட்டம்

# அங்கீகரிக்கப்படல் வேண்டும்!

★ பாரம்பரியமான வரலாற்றையும், தொடர்ச்சியான நிலப் பரப்பையும் தனித்துவமான மொழி, கலாச்சாரம் என்பவற்றையும் கொண்டுள்ளவர்கள்.

★ இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் இரண்டாம் தரக்குடிமைகள் ஆக்கப்பட்டதுடன், மனிதாபிமானமற்ற இன அழிப்புக்கு இலக்காக்கப்பட்டுள்ளவர்கள்.

★ தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளின் விளைவாய் ஆயுதம் தாங்கிய போராட்டப் போக்கிற்கு உந்தப்பட்டுள்ளவர்கள். ஜனநாயக ரீதியாகத் தமது எண்ண வேட்கையை வெளிப்படுத்தியதோடு போராட்டத்தின் கடுமையான நிலையிலும் உருக்குப் போன்ற உறுதியைப் புலப்படுத்தியுள்ளவர்கள்.

★ இறந்துபோன இறைமையை மீட்டெடுத்து தனியானதொரு அரசை நிறுவுவதைவிட வேறெதுவும் இனப்பிரச்சனைக்கு தீர்வாக இருக்கப்போவதில்லை.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக நிகழ்ந்து வரும் ஈழப்போராட்டப் பாதையில் எமது மக்கள் அனுபவித்த - அனுபவித்து வரும் இன்னல்கள் - இடர்ப்பாடுகள் அளப்பரியன. எழுத்துக்களில் வடிக்க முடியாத எத்தனையோ இழப்புக்களையும், வேதனைகளையும், சோகக் கதைகளையும் எம்மவர் சுமந்து நிற்பது வெறும் இடைக்காலத் தீர்வுக்காக அல்ல என்பது வெளிப்படை. அனைத்து அடக்குமுறைகளிலிருந்தும் விடுபட்டுப் புதியதொரு சமத்துவ - சமதர்ம - சமூக அமைப்பை நிறுவும் பூரண விடுதலையே இன்றைய தேவை என்பதை மக்கள் நன்குணர்ந்துள்ளனர். இந்த இலட்சியப் பயணம் நிறைவெய்தும்வரையில் ஓயுதலின்றி உழைக்க உறுதிபூண்டவர்கள் ஈழத்தின் குடிமக்கள்.

### இந்தியாவின் ஏமாற்றமும் இலங்கையின் கபடநாடகமும்

ஈழப்போராட்டம் இன்று இலங்கைத்தீவின் எல்லைக்குள் மட்டும் முடங்கிவிடாமல் அனைத்துலகக் கவனத்தையும் ஈர்த்திருப்பது தெரிந்ததே. இந்துமாக்கடல் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவமும், இலங்கையில் செயற்படும் அந்நிய கூலிப்படைகளின் செயற்பாடும் உலக அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்காது என்பது தெளிவு. இலங்கையில் போராடும் தமிழ் பேசும் மக்களை நசுக்க ஏகாதிபத்தியங்களின் துணையைப் பெற்று நிற்கும் சிறிலங்கா அரசானது உள்நாட்டு விவகாரம் எனக் கூறுவது கண்துடைப்பானதே.

இந்தியா தனது சொந்தப் பாதுகாப்பு நலன் கருதியும், இந்துமாக்கடல் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை நிலைநாட்டவும், தமிழ்பேசும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலான ஆதரவு நல்கவும் வேண்டி இலங்கையின் இனப்பிரச்சனையில் கவனம் செலுத்தவேண்டி ஏற்பட்டது. அதுவும் ஆடி 1983ன் பின் சிறிலங்கா தீவிர இனஒழிப்பில் இறங்கியபோது இந்தியா அக்கறையுடன் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று.

ஆனால் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக கபட நாடகம் ஆடி ஏமாற்றிவந்த சிறிலங்கா அரசு இந்தியாவையும் தனது வலைக்குள் சிக்க வைக்க முயற்சித்தது. ஆரம்பத்தில் சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டதும், பின்னர் இணைப்பு 'சி' பிறப்பெடுத்ததும் பின் திம்புவரை சென்று பேசியதுபோக பெறப்பட்ட கால அவகாசத்தில சிறிலங்கா தன்னை இராணுவ ரீதியாக ஸ்திரப்படுத்திக்கொண்டது.

இந்த இராணுவ ஸ்திரப்படுத்தலானது மூன்று வழிகளில் மேற்கொள்ளப்பட்டது. 1. கேந்திர முக்கியமான இடங்களில் நிறுவப்பட்ட புதிய இராணுவ முகாமகளும், மூன்று மைலுக்கொன்றாய் குடிமக்கள் வாழும் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட புது முகாம்களுமாக ஏறத்தாழ குடாநாடு நீங்கலாக முழுப்பிராந்தியமுமே இராணுவ மயப்படுத்தப்பட்டது. தேடுதல், அழித்தல் என்ற போர்வையில் தமிழ் பேசும் மககள் தினசரி கொல்லப்படலாயினர்.

2. ஈழப்பிரதேசத்தில் நிலவக்கூடிய பிரதேச தொடர்ச்சி துண்டாடும் விதமாக மேற்கொள்ளபபட்ட குடியேற்ற முயற்சிகள் இதன் வாயிலாக பல கிராமங்கள் சூனியப் பிரதேசங்களாக்கப்பட்டன. தமிழ் பேசும் மக்கள் அடித்து விரட்டப்பட்டு அகதிகளாக்கப் பட்டனர்.

3. பொதுமக்கள் மீதான பொருளாதாரத் தடையும், விமானக் குண்டு வீச்சுகளும். இதற்கூடாக மக்கள் மத்தியிலிருந்து போராளிகளை அந்நியப்படச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின.

இவையனைத்தும் கடந்த போர்நிறுத்த காலத்தின் பின் ஏற்பட்ட வளர்ச்சியேயாகும். ஆகப் பேச்சுவார்த்தைக் காலகட்டமானது இந்திய அரசை கபடத்தனமாக ஏமாற்றி சிறிலங்கா தன்னைப் பலப்படுத்தும் ஒரு காலகட்டமாகவே பயன்பட்டுவிட்டது.

பேச்சுவார்த்தைகளை ஒரு தலைப்பட்சமாக முறியடித்த சிறிலங்கா அரசானது தொடர்ந்தும் இனஒழிப்பு நடவடிக்கைகளை வெகு துரிதமாக்கி செயற்பட முற்பட்ட போதெல்லாம இந்திய அரசாங்கத்திடமிருந்து ஓரளவு அழுத்தங்களும் (Pressure) சர்வதேச சமூகத்திடம் இருந்து கண்டனங்களும் கிடைத்ததென்பதை மறுப்பதற்கில்லை.

தொடர்ந்துவந்த இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தை என்றும், அரசியல் தீர்வு காண்பது என்றும் பசப்பல் வார்த்தைகள் நிறையவே பேசப்பட்டன. மாகாண சபை, பிரதேசசபை, இணைப்பு 'சி' என்று காலத்துக்குக்காலம் யோசனைகள் முன்வைக்கப் பட்டபோதிலும் எவற்றையும் நடைமுறைப்படுத்த சிறிலங்கா சித்தம் கொண்டிருக்கவில்லை. இந்த வகையில்தான டிசம்பர் 19 யோசனைகளும முன்மொழியப்பட்டன.

### டிசம்பர் 19 யோசனைகள்

இந்த யோசனைகள் தமிழ் பேசும் மககளுககு ஏதோ பெரிய வரப்பிரசாதமலல. அம்பாறை தேர்தற் தொகுதியை நீக்கிய புதிய கிழக்கு மாகாணம் வரைவு செய்யப் படும் எனறும, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிறுவப்படும் வெவ்வேறான இரு மாகாண சபைகளுககு இடையில் ஒருவித நிர்வாக இணைப்பு பேணபபடலாம் என்பதையும உள்ளடக்கமாகக் கொண்டது டிசம்பர் 19 யோசனைகள். இந்திய இணை அமைச்சர்களான நட்வர்சிங், சிதமபரம் ஆகியோருக்கு வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் அடிப்படையில் பெறப்பட்ட டிசம்பர் 19 யோசனைகளிலிருந்தே; ஜே. ஆர். அரசு பின்வாங்கிவிட்டது. இதிலிருந்தாவது ஜே. ஆர் அரசின் கபடநாடகத்தை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

### ஈழப் போராட்டத்தை அங்கிகரியுங்கள்

எனவேதான் ஈழப்போராட்டமானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இலங்கையானது ஒரே தீவாக விளங்குகின்றபோதிலும் இது சிறிலங்கா, ஈழம் என்னும் இரு நாடுகளைக் கொண்டது என்பதை அகில உலகமும் அறிந்துகொள்ளும் வகையில் பிரகடனப்படுத்தல் வேண்டும். ஈழத்தில் வாழும் மக்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கக்கூடிய தேசிய இனம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் நடாத்தும் விடுதலைக்கான போராட்டம் என்ற வகையிலும், இதன் முற்போக்கு அம்சங்கள் என்பதும், இது கொண்டிருக்கக் கூடிய ஏகாதிபத்திய எதிர்ப்பையும் விளங்கிக்கொள்ள வேண்டும். ஈழப் போராட்டம் இந்துமாக் கடல் பிராந்தியத்தில் வகிக்கும் பாத்திரத்தையும் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு அங்கீகரிப்பதனூடாக இந்தியாவோ வேறெந்த நாடுமோ ஈழப் போராட்டத்திற்கு வழங்கக் கூடிய ஆதரவை வெளிப்படையாகவே செய்யமுடியும். பாலஸ்தீனியர்களுக்கு ஒரு தாயகம் வேண்டும் என்று அங்கீகரித்திருப்பதைப் போல, நமீபிய மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பதைப போல ஈழப்போராட்டமும உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

சிறிலங்காமுன்வைக்கும தடுமாற்றங்கள் நிறைந்த புதிய புதிய யோசனைகளையும், அதற்கான விளக்கங்களையும் பரிசீலனை செய்துகொண்டு ஈழப் போராளிகள மீது நிர்ப்பந்தமான தீர்வுகளைத் திணிக்காமல் ஈழப்போராட்டத்தை ஏற்று அதிலிருக்கக்கூடிய நியாயங்களை உலகரங்கின் முன் வைப்பதுவே சிறிலங்காவை அம்பலப்படுத்த சரியான வழியாகும்.

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**




ஆய்வு நிறுவனத்தின்

## தொழில் நுட்ப அறிமுக அரங்கு

எமது பிரதேச வளங்களை தகுந்த முறையில் உபயோகித்து உற்பத்தித்துறையினை முன்னேற்ற கரமாக்குவது எதிர்கால சந்ததியின் வாழ்க்கையை வளமாக்கும். இவ்வகையில் சில தொழில்நுட்ப அறிமுகங்களை ஆய்வு நிறுவனம் அவ்வப்போது செய்து வந்துள்ளது.

சூரிய சக்தியின் பயன்பாடு, உயிர்வாயுப் பயன்பாடு போன்ற பல விடயங்களை அறிமுகப்படுத்தும் முகமாக ஆய்வு நிறுவனம் காட்சியகம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

எமது மண்ணில் கிடைக்கும் வளங்களை தகுந்த தொழில் நுட்பத்தினூடாக பயன்படுத்தும் வெளிப்பாடு நடைபெறவுள்ளது. இது 18.04 87 அன்று ஆய்வின் காட்சியகத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. தொடர்ந்து 19,20,21ம் திகதிகளில் விவரணத்துடன் மக்களின் பார்வைக்கு விடப்படுகிறது.

திருகோணமலையில்

## இராணுவ முற்றுகை முறியடிப்பு

● திருகோணமலை மாவட்டத்தில் கொத்திக்குளம் காட்டுப்பகுதியில் எமது முகாமை முற்றுகையிடவந்த நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை 14-3-87 அன்று சுற்றிவளைத்து எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பின்வாங்கி சென்றனர் வில்கம் விகாரை இராணுவ முகாமில் இருந்து காடுகளூடாக நடந்துவந்த இராணுவத்தினர் கொத்திக்குளக்காட்டில் தங்கி எமது முகாமைத் தாக்க திட்டமிடப் பட்டிருக்கும்போது எமக்கு கிடைத்த தகவலை அடுத்து இராணுவத்தினர்மீது சிறுரக மோட்டார் தாக்குதலை மேற்கொண்டோம் இந்த தற்காப்பு நடவடிக்கைகளினால் இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோழர்களும் பங்குகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில்

## ஈழவர் முன்னணியின் பேரணி

சிறிலங்கா சிங்கள சோவனிச அரசானது ஈழப் பிரதேசமெங்கும் தனது பேரினவாத விஸ்தரிப்பை மிகவும் கொடூரமான முறையில் நடைமுறைப்படுத்தி வருகிறது. அண்மைக் காலங்களில் வடக்கு, கிழக்கு, மலையகம் கொண்ட ஈழவர் பிரதேசங்களில் தனது குரூர கொலை வெறியாட்டங்களை நடத்திக் கொண்டிருப்பதை நாம் மறந்து விடமுடியாது. கொக்கட்டிச்சோலையில் முன்னூறுக்கும் அதிகமான மக்கள் இளையதும் முதியதுமாக கொலை செய்யப்பட்டும் மூதூரில் பச்சனூரில், கும்புறுப்புட்டிப் பகுதிகளில் கோயிலில் தஞ்சம் புகுந்தவர்களை வெட்டிக் கொன்றும் குடாநாட்டில் தினம் தினம் செல்லடிகளாலும் ஹெலித் தாக்குதல்களாலும் அப்பாவிகளைக் கொன்று குவித்தும் வன்னிப்பிரதேசத்தில் தனது இனஅழிப்புகளைத் தீவிரப்படுத்தியும் வரும் சிங்கள பாசிச அரசின் அராஜக நடவடிக்கையை அம்பலப்படுத்துவோம். ஒருமித்த குரலில் எதிர்த்து எமது இறைமையை மீட்டெடுக்கும் போராட்டத்தைத் துரிதப்படுத்துவோம்.

அடிப்படை மனித உரிமைகளை மீறி ஈழவரைக் கொன்றும் காணாமற் பண்ணியும் எமது நிலங்களை அபகரித்து வரும் சிங்களப் பேரினவாத அரசின் நடவடிக்கையை மனித நேயத்தை மதிக்கும் மனிதாபிமான நாடுகள் கண்டிக்கவேண்டும்.

ஈழம் தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்பதை இந்தியா ஏற்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இந்த வகையில் இந்துசமுத்திரத்தின் முக்கியம் கருதி சிறிலங்காவில் புகுந்திருக்கும் அந்நிய சக்திகளை இனங்கண்டு ஐ. நா. சபையில் ஈழப்பிரச்சனையைக் கொண்டு வந்து எமது போராட்டத்தை நியாயப்படுத்த வேண்டும். சகல ஒடுக்குமுறைகளை முறியடிக்க நாம் மேற்கொண்டுள்ள நியாயமான ஈழப்போராட்ட முன்னெடுப்பை இந்தியா அங்கீகரிக்கவேண்டும்.

இழப்புக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதென இனம்கண்டு கொள்வதுடன் பேரினவாதிகளின் அழிப்பு நடவடிக்கைகளை முறியடிக்கவும் சர்வதேச ரீதியில் எம்மைக் கொண்டு செல்லவும் ஈழவர் அனைவரும் ஒன்றுசேர்ந்து போராட்ட வழிமுறைகளில் பங்குகொள்ள வேண்டும். கடந்த 26-3-87 அன்று காலையில் ஈழவர் மீது சுமத்தப்பட்டுள்ள ஒடுக்குமுறைகளை எதிர்த்தும், இந்தியா விடுதலை அமைப்புக்களை அங்கீகரிக்கவேண்டும் என்றும் ஈழவர் முன்னணி நடாத்திய பேரணியில் 5000க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். நாச்சிமார் கோயிலடியில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமான இவ் ஊர்வலம் பிற்பகல் 3 மணிக்கு கச்சேரியடியில் நடந்த பொதுக்கூட்டத்துடன் முடிவுற்றது.

தோப்பூர்

## இராணுவக் காவல் அரண்மீது தாக்குதல் ஐவர் பலி! பலர் படுகாயம்!!

24-3-1987 அன்று இரவு 9-30 மணியளவில் தோப்பூர் இராணுவக்காவல் அரண்மீது மேற்கொல்லப்பட்டபோது ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இன ஒழிப்பை மேற்கொண்டுவரும் சிறிலங்கா இராணுவத்தினர் இஸ்லாமியரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தோப்பூர் கிராமத்தில் அண்மையில் முகாம் அமைத்து இருந்தனர். இந்த முகாம் அமைக்கப்பட்ட பின்னர் பொதுமக்கள் இராணுவத்தினரால் கோரமாகக் கொல்லப்பட்டனர் என்பதும், பச்சனூர், இளக்கந்தை போன்ற கிராமங்கள் வேட்டையாடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஊர்காவல் படையினரும், இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் பேசும் மக்களை பிளவுபடுத்தும் சதிவேலைகளில் ஈடுபட இம்முகாம் உதவிவந்தது குறிப்பிடத்தக்கது. அண்மையில் காடுகளிலும், குடியிருப்புப்பகுதிகளிலும் பொம்பர், ஹெலி தாக்கிய தாக்குதல்களுக்கு இங்கிருந்தே திட்டம் போடப்பட்டது. மற்றுமொரு இன அழிப்பை மேற்கொள்ள இருந்த சமயம் எமது தோழர்களால் நிகழ்த்தப்பட்ட R.K. 155 M. M. ரக மோட்டார் தாக்குதல்களால் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு முகம் கொடுக்காத இராணுவம் பத்து அப்பாவி முஸ்லிம்களை சுட்டுக்கொன்றதுடன் இஸ்லாமியரின் ஐந்து வீடுகளையும், இரண்டு கடைகளையும் தீக்கிரையாக்கியுள்ளனர். இச்செயலானது இஸ்லாமியருக்கு பரிந்து பேசுவதாகக் கூறும் அரசின் கபடநாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

பூவரசந்தீவில்

## புறமுதுகு காட்டிய இராணுவம்

அகதிகளாக இடம்பெயர்ந்த ஈழவரை மீண்டும் குடியேற்றி பாதுகாத்து வருவதாக உலகை ஏமாற்றி வரும் ஜே. ஆரின் பாசிச அரசு இராணுவங்களை ஏவி மீண்டும் இன அழிப்புகளையே செய்து வருகிறது. 15-3-87 அன்று தம்பலகமத்தில் பூவரசந்தீவு கிராமத்தைச் சுற்றி வளைத்து இனப் படுகொலை செய்ய வந்த இராணுவத்தினரை நாம் எதிர்த்து தாக்கியதில் இராணுவத்தினர் புறமுதுகுகாட்டி ஓடிவிட்டார்கள். இத்தாக்குதலில் எம்மோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் தோழர்களும் இணைந்து இராணுவத்தினரை எதிர்த்தனர். இம்மோதலில் போராளிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. இராணுவத் தரப்பில் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். சிலர் இறந்திருக்கலாம்.




## புரட்சிப் பாதையைக் காட்டும் பொதுமை

முதற்பக்க முக்கியத்துவம் பெறும் விடயங்கள் - பொதுவானதும் ஆழமானதுமான பிரச்சினைகளை ஆராய்வதாக அமைகின்றன. இயக்கங்களின் ஆயுததாக்குதல்களும் வெற்றிகளும், மரணங்களுமான ஈழ மண்ணின் அன்றாடப்பரப்புகள் அடுத்தடுத்தப் பக்கத்திலேயே வருகின்றன. எங்கள் கிராமத்தில் ஈழச்செய்தி ஆகிய அம்சங்களைத்தான் சொல்கிறேன்.

முதற்பக்க தலையங்கங்களும் அவை தொடும் பரப்புக்களும் பத்திரிகையின் தரத்திற்கு கனத்தைக் கொடுப்பதுடன், ''வியாபாரரீதியான பத்திரிகையல்ல இது'' என்பதை வெளிப்படையாகக்குகின்றன. விடய ஒழுங்கிலும், பொதுமை இதர இதழ்களில் இருந்து வேறுபட்டே நிற்கின்றது.

ஆய்வு - பகுதி தர்க்கரீதியான சிந்தனைவழிப்பட்ட காரணகாரியங்களைத் தெளிவுபடுத்துகிறது. மேலோட்டமான பார்வையில் சிக்காத - ஆனால் புரையோடிப் போயிருக்கின்ற அடிப்படை பிரச்சினையை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. இதனால் அரசியல் அறிவில் குழந்தையாக உள்ளோருக்கும் கூட புரட்சிப் பாதையின் அவசியமும் அதன் தவிர்க்க முடியாத தன்மையும் பற்றிய தெளிவும் ஏற்படுகிறது. வெறுமனே ஒரு மாறுபட்ட ரசனைக்காக (Thrill), போராட்டத்தை ஆதரிக்கும் சிலபுறம்போக்கான மனிதர்களையும் உங்கள் வெளியீடுகள் சிந்திக்க வைக்கிறது. நீங்கள் கூறும் மணியான விடயங்கள் பாமரர்களையும் சென்றடைய வேண்டுமல்லவா...... அதை மனதில் வைத்து இலகுவாக்கி வெளியிடுவதில் கொஞ்சம் கவனம் எடுப்பீர்களா......

வாசகர்
பிறேமராஜன்
வற்றுப்பளை.

## மலையக மக்கள் எமது உடன் பிறப்புகள்

● மலையக மக்களின் இன்னல்களையும், கண்ணீரையும் அறிந்து வைத்திருந்த நாம் இப்போ சில காலமாக 'பொதுமை' மூலம் அறியக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

பெருந்தோட்டங்களின் வளர்ச்சிக்காக, தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் ஈந்து கடைசியில் தம் உடலையே தோட்டங்களுக்கு உரமாக்கும் எம் உடன் பிறப்புக்கள் படும் வேதனையை, தங்கள் பத்திரிகை மூலம்தான் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. மூன்று வருடகாலங்கள் களுத்துறை மாவட்டத்தில் எம் இன மக்களோடு வாழ நேர்ந்ததால், அவர்களுடைய நிலையை என்னால் நன்கு புரிந்கொள்ளக் கூடியதாகவுள்ளது. இன்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களில் பலர் மலையகத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட மக்களை இரண்டாம், மூன்றும் தர மக்களாக மதித்து வாழ்கின்ற நிலையைப் பார்க்கும் போது, மனது வியாகுலப்படுகின்றது. இப்படியான தவறான மனநிலைகளை களைந்து எறிய தங்கள் ஆக்கங்கள் வழி வகுக்குமென எண்ணுகிறேன். அவர்களும் இந்நாட்டுப் பிரசைகள்தான் என்பதையும் அவர்களும் உரிமை வாழ்வு வாழவேண்டும் என்பதையும் அவர்கள் தரவேறுபாடுகளுக்குரிய மக்களல்ல என்பதையும் சகலரும் புரிந்துகொண்டு தம் உடன்பிறப்புக்களாக்கிக் கொள்ளக்கூடிய வழியை தங்கள் ஆக்கங்கள் ஏற்படுத்திக்கொடுக்கும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

யோ. மாசிலாமணி
முல்லைத்தீவு.

## இஸ்லாமியரைப் பணயமாக்கும் சிறிலங்கா அரசு

ஈழப்போராட்ட முன்னெடுப்பில் இஸ்லாமிய மக்கள்'' இத்தலைப்பின் கீழ் இடம் பெற்ற வரலாற்றுப் பின்னணிகள், குடியேற்றங்கள் மூலம் இஸ்லாமியர் பெரும்பான்மையினரால் பாதிக்கப்பட்டமை, மதவழிபாடுகளின் போதும் சுட்டுக்கொல்லப்பட்டமை போன்ற விடயங்கள், தமிழ் பேசும் மக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டியவர்களே என்ற சிறிலங்கா ஆட்சியினரின் சுயரூபம் வெளியே தெரியப்படுகிறது. ஈழப்போராட்டத்தில் இவர்களின் ஆதரவும் பங்களிப்பும் பெருகிவருவதை காணமுடிகிறது.

சிறிலங்கா அரசு இஸ்லாமியரை பகடைக்காய்களாக வைத்திருக்கின்ற உண்மை

(3-ம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்சனையில் இந்திய ராஜதந்திரம் வென்றதா?

**இனப் பிரச்சனையின் சிக்கலானதும் திருப்புமுனையானதுமான ஒரு காலகட்டத்திற்குள் இன்று நாம் பிரவேசித்திருக்கிறோம். ஈழத்தமிழர் பிரச்சனை இன்று சர்வதேச அரங்கின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இப்பிரச்சனை சம்பந்தமாக இந்தியாவின் ராஜதந்திர நடவடிக்கைகளிலும் அணுகுமுறையிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.**

### இந்திய அணுகு முறையில் ஏற்பட்ட மாற்றம்

தமிழ்பேசும் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசத்தில் சுதந்திரமாக வாழும் சந்தர்ப்பத்தை வழங்கும் அர்த்தமுள்ள, ஒழுங்கான சுயாட்சி அமைப்பு ஒன்றை உருவாக்கும் அரசியல் தீர்வு காணப்படுவதையே இந்திய அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. இந்த நிலைப்பாட்டிலிருந்து ராஜ தந்திர ரீதியாக சிறீலங்கா அரசை வழிக்குக் கொண்டுவரும் நோக்கில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை இந்திய அரசு கையாண்டு வந்துள்ளது.

திம்புவில் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததன் பின்பு சமாதான நோக்கத்திற்காக பதினொரு தூதுக் குழுக்களை இந்திய அரசு சிறிலங்காவிற்கு அனுப்பி வைத்திருந்தது. இந்நிலையில் 85 ஏப்ரல், 86 டிசம்பர் ஆகிய காலங்களில் முன்வைக்கப்பட்ட யோசனைகளையும் மறுதலித்து இந்த வருட ஆரம்ப முதல் குடாநாட்டில் பொருளாதாரத் தடை விதித்ததுடன் கிழக்கில் இனப்படுகொலைகளையும் கட்டவிழ்த்து விட்டது சிறீலங்கா அரசு. இதுவே இந்தியாவின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தி இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு எச்சரிக்கை விடும் கருத்துப்பட டிமாஸ் (De March) என்ற சொல் பயன்படுத்தப்பட்ட ராஜீவ் ஜே. ஆருக்கு எழுதிய கடிதத்திற்கு காரணமாயிற்று.

இதனைத் தொடர்ந்து சர்வதேச ரீதியாக இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகவே கனடா, நோர்வே, ஸ்வீடன் முதலிய நாடுகளின் ஆதரவுடன் ஆர்ஜென்தீனா ஐ.நா. சபை மனித உரிமைகள் கமிஷன் கூட்டத்தில் சிறீலங்கா அரசுக்கு எதிராக சமர்ப்பித்த பிரேரணையாகும். இப்பிரேரணை திருத்தங்கள் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டாலும் சர்வதேச அரங்கில் சிறீலங்கா அரசின் முகத்திரை கிழிக்கப்பட்டே உள்ளது. அத்துடன் ஈழப் போராளிகளுக்கு நவீன ரக ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பரவலாக செய்திகள் வெளிவரத் தொடங்கின. இலங்கையில் அந்நிய கூலிப்படையினர் செயற்படுவதாக இந்தியா குற்றஞ்சாட்டியதுடன், பிரிட்டிஷ் கூலிப்படையை சேர்ந்த நபருடன் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி காணப்படும் புகைப்படம் உட்பட்ட விபரங்களை இந்திய நாளிதழான 'இந்து' வெளியிட்டது. இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள் என்ற சிறீலங்கா அரசின் பிரச்சாரத்தை முறியடிக்கும் விதமாக இந்தியாவில் ஒருலட்சத்து இருபத்தியெட்டாயிரத்து ஐந்நூற்றெழுபது அகதிகள் இருப்பதாகவும், இலங்கையில் சகஜநிலையும், அமைதியும், பத்திரமாக வாழும் சூழ்நிலையும் உருவான உடன் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவர் எனவும் இந்திய உள்துறை அமைச்சர் அறிவித்தார். பேச்சுவார்த்தைக்கான தனது மத்தியத்துவத்தை தொடருவதற்கு அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறும், குடாநாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்குமாறும், அவ்வாறான நிலையில் 86 டிசம்பர் 19இல் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தியா முன்நிபந்தனைகளை விதித்திருந்தது.

### சிறி லங்கா அரசின் பதிலடிகள்

இந்நிலையில் ஆர்ஜென்டீனாவும், இந்தியாவும் முதலில் தமது நோய்களை குணப்படுத்தட்டும் என்று சீண்டிவிளையாடும் போக்கில் ஜே ஆர். அறிக்கை விடுத்தது மட்டுமன்றி, இலங்கையில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றும், போராளிகள் இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை நிறுத்தி ஆயுதங்களை கீழேபோடும் பட்சத்திலேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படலாம் என்றும் சி லங்கா மறுத்தறிவித்தது.

ஐ. நா. மனித உரிமைகள் கமிஷன் கூட்டத்தில் சிறீலங்கா பிரதிநிதியின் உரையானது, மத்தியஸ்தம் வகிக்கும் இந்தியா தீவிரவாதிகளை கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. அவ்வாறான நிலையில் எவ்வாறு உண்மையான மத்தியஸ்தராக இந்தியாவை நம்பமுடியும் என்பதாக அமைந்திருந்தது. அத்துடன் இந்தியாவுக்கு எதிராக இலங்கை செயற்படவில்லை. எமது உள்நாட்டு விவகாரத்தை நாமே நிர்வகிப்போம். இது எமது பிரத்தியோக உரிமை. இதில் எவரும் தலையிட முடியாது என்ற அறிக்கையும் விடப்பட்டது. இவையாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல ஈழப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையென்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து அரசாங்க நாடாளுமன்றக் குழு தீர்மானம் நிறைவேற்றியது. அதேவேளை இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை நிராகரிக்கும் விதத்திலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் இந்தியாவின் போக்கு இறுக்கமைந்தபோது இந்தியாவின் நேரடியான தலையீட்டினை எதிர்பார்த்து, அதற்கெதிரான ஆதரவினை பெறுவதற்காக எதிர்க்கட்சிகளை சந்தித்து பேசுவதில் சிறீலங்கா அரசாங்கம் முயன்றது. இதன் விளைவாகவே சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவிடமிருந்து இந்தியாவின் விருப்பத்திற்கிணங்க நாம் ஆட்சியை நடத்தமுடியாது. இலங்கை எதிர்நோக்கும் ஆபத்து இந்தியாவின் பயமுறுத்தலே போன்ற அறிக்கைகள் வெளிவந்தன. சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களும் இலங்கை அரசு தனது தாய்நாட்டின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக தமிழ்த்தீவிரவாதிகளுக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கைகள் தவறு என்று யாரும் கூறிவிட முடியாதென வக்காலத்து வாங்கியிருப்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது

இந்நிலையில் பயங்கரவாத ஒழிப்புக்காக மேலும் ரூபா 200 கோடிக்கு குண்டுகளையும், கப்பல்களையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜே. ஆர். அறிவித்தார். தனது யுக்தி வெற்றிபெற்றே தீரும் என்றும், முன்பிருந்த கியூ வரிசை ஒழிக்கப்பட்டுள்ளதாகவும், இப்போதுதான் ஒரு கியூ வரிசையை தோற்றுவித்துள்ளதாகவும், அதுவே இராணுவத்தில் சேருவதற்கான இளைஞர்களின் கியூ வரிசை என்று மார்தட்டியுள்ளார். அத்துடன் தேசிய பந்தோபஸ்து நிதிக்கு தாராளமாக உதவும்படி அவர் செல்வந்தர்களைக் கேட்டுள்ளார். நிதியமைச்சர் ரொனிடிமெல் உலகவங்கி, சர்வதேச நாணயநிதி ஆகியவற்றினிடம் கடன் பெறுவதற்காக அமெரிக்கா பயணமாகியுள்ளார். இந்தியத் தலையீடு என்ற அச்சம் காரணமாக பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா முதலிய அண்டை நாடுகளுடன் அரசாங்கம் தற்போது தொடர்புகளை நெருக்கமாக்கியுள்ளது.

### இந்தியா நடவடிக்கையில் இறங்கப்போவதாக அச்சுறுத்தல்

இந்தியாவுக்கு ஆத்திரமூட்டும் சிறிலங்கா அரசின் நடவடிக்கை காரணமாக இரு தரப்பு உறவுகளும் மோசமடைகின்றன. பொருளாதாரத்தடைகளை தளர்த்தி சிறிலங்கா அரசு இறங்கி வருவதாக காட்டிக் கொண்டபோதும், அதனை உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்கான கண்துடைப்பானதும், தற்காலிகமானதுமான நடவடிக்கை என்று இந்தியா நிராகரித்தது.

இந்திராகாந்தி காலத்தில் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த தினேஷ் சிங் சிறப்புத் தூதராக சிறீலங்காவுக்கு அவசரமாக அனுப்பப்பட்டார். இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது என்பதை இலங்கைக்கு உணர்த்த வேறுசில நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக ராஜீவ் காந்தி அறிவித்தார். இதைத்தொடர்ந்து ஏற்பட்ட தினேஷ் சிங்கின் வருகையானது இணக்கப்பேச்சுக்கன்றி எச்சரிக்கை விடுப்பதற்காகவே அமைந்தது. குடாநாட்டை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றுமென தான் நம்பவில்லை என ராஜீவ் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் தென்பிராந்தியப் பாதுகாப்புக்கென ஒரு லட்சம் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டனர். இந்திய இலங்கை கடல் எல்லையில் சிறிலங்கா இராணுவம் அத்துமீறிச்சென்று இந்திய மீனவரை இம்சைப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டு பாக்கு நீரிணையில் இந்தியக் கடற்படை உசார்படுத்தப்பட்டது.

பிரதமர் ராஜீவ் தலைமையில் இந்திய உயர்மட்ட அரசியற்குழு கூடி பொருளாதாரத் தடை காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நேரடியாக உணவு, எரிபொருள் வழங்குவதுபற்றி ஆராயப்பட்டது.

இந்திய ராஜ்ய சபையிலும், அதற்கு வெளியிலும், ஈழத்திலிருந்தும் இப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவின் தலையீடு பற்றியும் மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் பற்றியும் ஈழப்போராட்டத்தை அங்கீகரித்தல் பற்றியும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன குறிப்பாக ராஜ்ய சபையில் ஜனதாகட்சி பிரதிநிதி இந்தியா பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்தது போல ஈழப்போராட்டத்திற்கும் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரியிருந்தது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அம்சமாகும்.

இந்தியாவின் நலன்களுக்கும், இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் சமாதானத்திற்கும், ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களுக்கும் ஒரே சமயத்தில் குந்தகம் விளைவிக்கும் விதமாக, ஏகாதிபத்திய சக்திகளுடன் உறவுகளைப் பலப்படுத்தி தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வருகிறது ஸ்ரீ லங்கா அரசு. இராணுவ ரீதியில் இனப்படுகொலை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தனது சகல வளங்களையும் செலவிடுகிறது. இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கென 35% ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரொனி டிமெல் கூறியுள்ளார். இந்தியாவின் நல்லெண்ண மத்தியஸ்த்துவத்தை நிராகரிக்குமளவுக்கு ஸ்ரீ லங்கா முன்னேறியுள்ளது. இது இந்துசமுத்திரப் பிராந்தியத்தை போர்க்களமாக்கும் முயற்சியாகும்.

இந்நிலையில் ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களது எண்ண அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வொன்றைக் காண்தென்பது பேச்சுவார்த்தை என்ற இழுத்தடிப்பினாலோ, நேரடியான இந்திய இராணுவத் தலையீட்டினாலோ சாத்தியமாகாது. மனிதாபிமான அடிப்படையில் ஈழப்போராட்டத்தை அங்கீகரித்து, அந்த அடிப்படையில் ஈழப்போராளிகளுக்கும், ஈழவர்களுக்கும் ஆதரவு வழங்குவதுமே இந்தக் கட்டத்தில் இந்தியா ஆற்ற வேண்டிய கடமையாகும். அதுவே ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களின் சுபீட்சத்திற்கு மட்டுமல்லாது, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்குமான அடிக்கல் ஆகும்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

நிலையையும் இவர்களின் அரசியல் பிரதிநிதிகள் பேரினவாத அரசின் அடிவருடிகளாக இருக்கும் உண்மை நிலையினையும் தெளிவாக வெளிப்படும் அளவுக்கு விடயங்கள் இடம்பெறுவது அவசியமாகிறது.

கருணைலிங்கம்
முல்லைத்தீவு

## பயிற்சியில் ஈடுபட்ட இராணுவத்தின் மீது தாக்குதல்

● வன்னிப் பிராந்தியத்தில் தமிழர் பிரதேசங்களை அபகரிக்கும் நோக்குடன் திட்டமிட்ட இராணுவத் தாக்குதல்களை நடத்தி தமிழர்களை வெளியேற்றிய சிறிலங்கா அரசு டொலர், கென்ட் பண்ணைகளில் சிங்களக் குண்டர்களையும், கொலைக்குற்றவாளிகளையும், குடியேற்றி அண்டையில் வாழும் மக்களுக்கு தொடர்ந்து இராணுவத்தினரின் உதவியுடன் இழைக்கும் இன்னல்களுக்கு பதில் நடவடிக்கையாக 9-3-87 அன்று, இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நேரம் எம்மால் 155 mm. R. K. மோட்டார் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாககுதலில் பலர் இறந்தும், காயப்பட்டும் இருக்கின்றார்கள்.

மலர்: 3 இதழ்: 7 மார்ச்: 1987

பொதுமை

வெளியீடு: ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்)
த. பெ இல. 2356, சென்னை - 600024

"வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோ டிலங்கை புக்கான்."

பத்துத்தலை இராவணன் புஜபல பராக்கிரமத்துடன் வீரனெனப் பேரெடுத்தவன் போரிலே தோல்வியுற்று வெறுங் கையோடு வீரம் இழந்தவனாக தலைகுனிந்து சென்றான். மந்திரி சுற்றங்கள், படைபட்டாளங்கள், சங்கரன் கொடுத்த ஆயுதங்கள் சகலமும் இருந்தென்ன இறுதியில் அவன் சந்தித்தது தோல்வியே. உண்மையை மறைக்க இவன் நாரதரைப்போல் பொய்களையே புழுகிக் கொண்டிருந்ததும் இன்று அவனை காப்பாற்ற யாருமில்லை. அனாதையாய் வெட்கித்து களத்தில் நிற்கின்றான்

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டியவர்கள். அதற்கான நியாயபூர்வமான அணுகுமுறைகளை உதறித்தள்ளி இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். ஆரம்பத்தில் இருந்து இராணுவத்தினரின் அடாவடித்தனங்களுக்கு முகம் கொடுத்து வந்த தமிழ் பேசும் மக்கள் அரசிடமிருந்து அன்னியப்படுத்தப்பட்ட நிலையில், கொடுமைகளை அனுபவித்தனர். பிரச்சினையை விட்டுவிலகிய அரசாங்கம் தன்னை ஆயுத ரீதியில் வளர்த்துக்கொள்ள ஏகாதிபத்தியங்களை அடிவருடத் தொடங்கியது. இந்த நிலையில்தான் பலஸ்தீனத்தை சின்னா பின்னமாக்கி அனுபவம் பெற்றிருந்த உலக பயங்கரவாதியான இஸ்ரேலின் உதவியைப் பெற்றுக் கொண்டது.

இவர்கள் மூலம் கிராமங்களை முற்றுகையிட்டு அழித்து மக்களை அகதிகளாக்கி பொருளாதார உயிர் சேதங்கள் மூலம் சோவனிசத்தை விரிவுபடுத்தி வருகிறது. இத்துடன் நிற்காமல் பிரிட்டிஷ் கூலிப்படைகளையும் பயன்படுத்தி தனது இராணுவ பலத்தை கூட்டிக்கொள்கிறது. இவர்கள் மூலம் பயிற்றப்பட்ட அதிரடிப்படையினர் கிழக்கில் செய்யும் இன அழிப்பு வேலைகள் தங்கவேலாயுதபுரம், படுவான்கரை, கொக்கட்டிச்சோலை படுகொலைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானில் பயிற்றப்பட்ட ஊர்காவல் படையினர் சமூகங்களுக்கிடையில் ஏற்படுத்தும் மோதலும் அதன் பாதிப்புகளும் நாம் அறியாதல்ல. கிழக்கில் அன்னியயோன்னியமாக வாழ்ந்த இஸ்லாமியர்களை இந்துக்களுடன் மோதவிட்டு குளிர் காய்ந்ததும் இவர்கள்தான்.

தென்னாபிரிக்க இனவெறியர்களிடமிருந்து கண்ணிவெடிகளுக்கு தாக்குப்பிடிக்கும் 'பவ்லோ' கவசவண்டிகளும், இத்தாலிய குண்டுவீச்சு விமானங்களும், சீனா, இஸ்ரேல் வழங்கிய நவீனரக கடற்படை படகுகளும், சிங்கப்பூர் வழங்கிய பெல் ஹெலிகொப்டர்களும் ஈழவர் மீது இவர்களுக்கு இருக்கும் அதீத அக்கறையை காட்டுகிறது.

மொசாட்டின் மூளையும், அன்னியரின் உதவியும் தோல்வி கண்டதால், இன்று தங்கள் சுயரூபங்களை மறைத்து ஈழவர் மத்தியில் நல்லவர் என்ற நாடகம் ஆடுகின்றார்கள் மக்களுக்கு குளிர்பானங்கள் வழங்குவதும், உடுபுடவைகள் கொடுப்பதும், "நாங்கள் அந்தக் கொலைகளைச் செய்யவில்லை. வேறிடத்தில் இருந்து வந்தவர்கள்தான்; இந்த படுபாதங்களை செய்தவர்கள். எங்கள் மீது தவறில்லை" என்ற கபடவார்த்தைகளை அண்மைக் காலமாக பயன்படுத்தியும், நல்லவர் நாமம் சூடியும் வரும் இவர்கள்தான் ஆரம்பத்திலிருந்து இனபபிரச்சினைக்கு தமது துப்பாக்கியை பயன்படுத்தி வந்தவர்கள் என்பதை ஈழவர்கள் மறக்கப்போவதில்லை.

அடக்குமுறைக்கெதிராகப் போராடும் ஈழவர்களை வெறும் அற்பத்தனமான நடிப்புக்களின் மூலம் கவரலாம் என இராணுவம் நினைக்கிறது. உணவு தானியம் முதல் உடுபுடவை டொபிவரை கொடுத்து மயக்கிட இராணுவம் முனைகின்ற சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. ஆனால் இவை எதனாலும் ஈழவர்கள் மயங்கி விடப் போவதில்லை என்பதும், ஈழப் போராட்டம் ஓய்ந்து விடப் போவதில்லை என்பதும் மட்டும் உறுதியானது.




## இலங்கையில் காணமல் போனவர் பற்றி ஐ, நா, அறிக்கை

இலங்கை அரசின் ஆயுதப்படைகளினால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனதாக இலங்கை தெரிவித்திருந்த 326 தமிழர்களின் பூரண விளக்கம் தரமுடியாத நிலையில் இருக்கிறது இதில் 5 பேரைத்தவிர மற்றையோர் பற்றிய எதுவித விபரங்களும் இலங்கை அரசினால் கொடுக்கமுடியாமல் இருக்கின்றது.

காணாமற் போனவர்கள் பற்றி விபரம் கோரும் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு சமர்பித்த ஒரு அறிக்கை மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறது. ஜெனிவாவில் கடந்த 2-2-87இல் ஆரம்பித்த மனித உரிமை ஆணைக்குழுவின் 43வது கூட்டத் தொடரில் இலங்கையில் காணால் போகும் தமிழர் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் உரையாற்றிய இந்தியகுழுத் தலைவர் திரு வீரேந்திரபட்டீல் பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் திடசங்கற்பமும், உறுதியும் இலங்கைக்கு இல்லையென கண்டனம் தெரிவித்துள்ளார். சட்டம் ஒழுங்கு என்ற போர்வையில், 1986ஆம் ஆண்டில் மட்டும் 2000க்கு அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்று மேலும் அவர் கூறினார்.

## போராளிகளுக்கு எதிராக இலங்கையில் கூலிப்படைகள்

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்தியா தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டுவருகிறது. கடந்த நான்கு வருடமாக இப்பிரச்சினையை நல்லதொரு தீர்வின்மூலம் முடிவுக்குக் கொண்டுவர எடுத்த முயற்சியில் இதுவரை இந்திய தரப்பில் 11 பேர் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். ஆனால் பிரிட்டன், இஸ்ரேல் மற்றும் சில நாடுகளின் கூலிப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கிருந்துகொண்டு இலங்கைப் படையினருக்கு பயிற்சி வசதிகளை அளித்து உதவி செய்து வருகிறார்கள். இது பிரச்சினையை மேலும் சிக்கலுக்கு இட்டுச்செல்லும் என இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

## லலித்துக்கு எதிராக ஆஸியில் ஆர்ப்பாட்டம்

இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சரின் அவுஸ்திரேலியா விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக சிட்னியில் ஆயிரக்கணக்கான தமிழர்களும், அவுஸ்திரேலியர்களும் பங்கு கொண்டு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

வடகிழக்கு தமிழ் பகுதியில் இராணுவங்களை குவித்துவருவதும், அப்பாவித் தமிழ் மக்களை கொலைசெய்வதும், சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும். ஈழம்தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை இந்தியா அங்கீகரித்து விடுதலைப் போராளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சகல ஆயுதங்களையும் மீள ஒப்படைக்க வேண்டும் என்ற கோஷங்கள் ஊர்வலத்தில் முன்வைக்கப்பட்டன.

பலமணிநேரம் நடந்த இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தின் பின் ஜனாதிபதி ஜெயவர்தனா, லலித் அத்துலத் முதலி ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

## 'இன்னுயிர் ஈந்தும்'

**தோழர் ஆறுமுகம்:- (டாக்டர் ஆறுமுகம்)** திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 9-10-86 அன்று மாரடைப்பினால் லண்டனில் தன்னுயிர் ஈந்தார். எமது அமைப்பின் விஞ்ஞான அறிஞர் சபையின் அக்கிராசனராகவும், SCOT என்னும் தாபன முதல்வராகவும் தனது பங்களிப்பினை ஆற்றிவந்தார்.

**தோழர் கமல்:- (நமசிவாயம்)** தங்கநகர் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் குடும்பஸ்தரானபோதும் பண்ணை வேலைகளில் ஆர்வமுடன் பணியாற்றினார். 17-1-87 அன்று கதிரவெளி இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார்.

**தோழர் அப்துல்லா: (அருட்பிரகாசம்)** கந்தளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். குடும்பத்தினரான போதும் அமைப்புப் பணிகளில் ஆர்வமுடன் செயற்பட்டார். வானாறு பொலிஸ் நிலையத்தாக்குதலில் பங்காற்றியவர். 2-3-87 அன்று மணியங்குளம் பகுதிக்கு மாட்டு வண்டியில் வந்த இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் சின்னப்பரா:- (பரராஜசிங்கம்)** வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கிளிநொச்சி பிராந்திய உறுப்பினராக இருந்து பங்காற்றியவர். கிளிநொச்சி, முல்லைத்தீவு இராணுவ அட்டூழியத்தின்போது தோழர் சாந்தனுடன் 21-3-87 அன்று இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் அப்பன்:- சிவா, பொடி (கமலநாதன்)** உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 16-3-87 அன்று ஆகாய, தரை மார்க்கமான இராணுவத் தாக்குதலின்போது இன்னுயிர் இழக்க நேர்ந்தது சுவிற்சலாந்தில் எமது அமைப்பின் வளர்ச்சிக்கு முன்னின்று பணியாற்றியவர். பருத்தித்துறை பிராந்தியக்குழு உறுப்பினராகப் பங்காற்றினார். அசைவுநிலை இராணுவக்குழுவில் இருந்து பல தாக்குதல் நடவடிக்கைகளின் வெற்றிக்கு துணைநின்றார்.

**தோழர் நிபன்: (மகேந்திரராஜா)** ஈச்சிலம்பத்தையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1-3-85இல் அமைப்பு மூலம் இராணுவப் பயிற்சி எடுத்தவர். மாணவர் வேலைத்திட்டங்களிலும், பண்ணைத்திட்டங்களிலும் பணியாற்றி வரும்போது 19-3-87 அன்று இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்கு இன்னுயிர் ஈந்தார்.

**தோழர் சாந்தன்:- (சாந்தகுமார்)** அல்வாயைப்பிறப்பிடமாகக்கொண்ட இவர், பருத்தித்துறை பிராந்தியக்குழுவில் பங்காற்றினார். பின்னர் மன்னார் பிரதேச நிதிப் பொறுப்பாளராக இருந்தார். முல்லைத்தீவு, கிளிநொச்சி இராணுவ அட்டூழியத்தின்போது 21-3-87 அன்று நேரடி மோதலில் இன்னுயிர் ஈந்தார்.

நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம்.